## தன்னைத்தான் வெறுத்து ….. deny himself…..

**Praise the Lord: இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**

ஞானத்தையும் உணர்வையும் கொடுக்கும் ஆவியானவர் நம் ஒவ்வொருவரையும் ஆட்கொண்டு வழிநடத்துவாராக. ஆமென்..

## Let us pray. ..

வேதத்தை மேலும் மேலும் தெரிந்துகொள்ளவும், தனக்கு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்காவும் ஒன்றுகூடி ஜெபிக்கவும் வாஞ்சையோடு இந்த வெள்ளிக்கிழமை ஆராதணைகளில் கலந்து கொள்ளும் உங்களனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். இந்த முயற்சி மிகவும் ஆசீர்வாதமானது. இந்த தகுதி நம்மாலே உண்டானதல்ல. தேவனாலே நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. என்பதை நாம் என்றும் நினைத்து இயேசுகிறிஸ்துவுக்கு நன்றி சொல்வோம். ஆமென்.

நாம் இயேசுகிறிஸ்துவை வணங்கிமட்டும் செல்ல வராமல்,

அவரை வணங்கி, அவரைப் பின்பற்றிச் செல்ல முயற்சிக்கிறோம்.

அதற்கான ஒரு சில வசனங்களை வாசித்து நாம் அனைவரும் ஜெபிக்க இருக்கிறோம்.

நாம் அனைவருமே ஜெபிக்க இருக்கிறோம். ஒவ்வொருவரும் சுருக்கமாக போதகர் சொல்லும் ஒரு ஜெப குறிப்பு, உங்கள் ஒரு ஜெபக் குறிப்பு என்று குறிப்பாக நாம் ஜெபித்தால் நாம் அனைவருமே ஜெபிக்க வாய்ப்பு இருக்கும். ஆமென். இன்று அதை முயற்சி செய்வோம். சில சமயம் அதிக நேரம் ஜெபிக்கத்தான் வேண்டும். சில சமயம் சிறிது நேரம் ஜெபித்தாலே போதும். இங்கு நமக்கு நேரம் குறைவாக இருப்பதினால் அதற்கு தகுந்தாற்போல் ஜெபிப்போம்.

நமக்கு நேரம் இருக்கும்போதெல்லாம் தேவனிடம் ஜெபிக்கலாம். அதற்கு முடிவேயில்லை. . . . ..

தேவன் நம் அனைத்து ஜெபங்களையும் கேட்டகிறவராக இருக்கிறார். ஆமென்.

இறந்துவிட்ட லாசரு இன்னும் கல்லறையிலே இருக்கிறார். நமது ஆண்டவர் ஜெபிக்கிறார். . . .

பிதாவே நீர் எனக்குச் செவிகொடுத்த படியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். . . என்றும்

நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன் என்று சொன்னபிறகு. . .

லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.

மரித்து கல்லறையிலே இருந்த லாசரு வெளியே வந்தார்.

வேதத்திலே யோவான் அதிகாரத்திலே 3 வசனத்திலே இந்த ஜெபம் உள்ளது. (2 1/2 வசனம்தான் என சொல்லலாம்.)

அதற்குபிறகு அவர் கடைசி நேரத்திலே, தமது சீஷர்களுக்காகவும், சீஷர்கள் முலமாக விசுவாசிக்கிற ஒவ்வொரு மனிதருக்காகவும் ஜெபம் ஏறெடுக்கிறார். அந்த ஜெபம் 26 வசனங்களாக இருக்கிறது. ஒரு நீண்ட ஜெபம்.

இறந்துபோன மனிதரை உயிர்பெறவைக்க 3 வசனத்திற்கும் குறைவான ஜெபம்.

உயிரோடு இருக்கும் மக்களுக்காக அவர்கள் அவரைப் பின்பற்ற ஜெபிக்கும் ஜெபம் 26 வசனங்கள். இன்னும் தொடர்ந்து நமக்காக ஜெபித்துக் கொண்டே இருக்கிறார்.

நாம் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது அவ்வளவு கடினமானது. நாம் அதிகஅதிகமாக பிரயாசப்பட்டாலும் நமக்கும் மீறிய ஒரு சக்தி நமக்கு தடைகளை உண்டாக்கும். அதை நாம் எதிர்த்து நிற்க கிறிஸ்து நமக்காக ஜெபித்துக் கொண்டேயிருக்கிறார்.

நம்முடைய அறிவுக்கும் மிஞ்சிய அந்த தடையை தகர்த்தெறிந்து நாம் அவருடைய அன்பிலே நிலைத்திருக்க அவரிடமே வேண்டுவோம். ஆமென்.

….அறிவாளியாக இருந்தாலும், முயற்சி செய்பவனாக இருந்தாலும், குழப்பத்தை விளைவிக்கக் கூடிய புலன்கள் மனத்தைப் பலாத்காரமாக இழுத்துச் செல்கின்றன.

அந்தப் புலன்களையெல்லாம் அடக்கி, என்னையே கருத்தில் கொண்டு, மனத்தை நிலைநிறுத்த வேண்டும். புலன்கள் எவனுடைய வசத்தில் உள்ளனவோ அவனுடைய ஞானமே நிலைபெற்றதாகும். (பகவத் கீதை 2:60-61)

Restless senses, O Arjuna, forcibly carry away the mind of even a wise person striving for perfection. (Gita 2.60)

Having brought the senses under control, one should fix one's mind on the Self. One's Prajna becomes steady whose senses are under control. (Gita 2.61)

உதாரணமாக. . . .

Example - 1

அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார் (பிர. 3:11)

He has made everything beautiful in its time. (NIV)

எனது கம்பெனியில் ஒரு நண்பர் 7 மணிக்கு வரவேண்டியவர் 7:01க்கு வந்துவிட்டார். அதற்கு Boss அவரை late என்று சொன்னபோது அதை அவர் ஒத்துக்கொள்ளாததுடன். . . 3:30மணிக்கு வேலைவிட்டு போகும்போது நான் சரியாக போகாமல் கொஞ்சம் லேட்டாகத்தான் போகிறேன்., அதனாலே இது பாரவாயில்லை என்றார்.

கம்பெனிக்கு வரவேண்டிய நேரத்திற்கு வரவேண்டுமென்று தெரிந்திருந்தும், அவர் அதை உணர்ந்துகொள்ளாமல் தான் தன்னுடைய நேரத்தை வேலை முடிக்கும்போது செலவிடுகிறேனே. . என அவரது எண்ணத்திலே அவருடைய விருப்பம் ஒரு குழப்பத்தை ஏற்படுத்துகிறது.. . ..,

நேரம் குறித்து சரியாக அறிந்திருந்தும், அதை முயற்சி செய்தும். . . .எப்படியோ அவருடைய மனதை பலாத்காரமாக அவருடைய சொந்த ஒரு எண்ணத்திற்கு இழுத்துச் செல்கிறதை நீங்கள் இங்கே பார்க்கலாம்.

Example - 2

போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்.

உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்.

But godliness with contentment is great gain.

But if we have food and clothing, we will be content with that. (1 Timothy 6:6,8)

**உண்ணவும் உடுக்கவும் இருந்தால் போதுமென்றிருக்கக் கடவோம். அப்படிப்பட்ட போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். கிறிஸ்துவுக்குள்.**

இதிலே ஒரு அம்சம் பாருங்கள். . . இருக்க இடம் என்று சொல்லவில்லை. மக்கள் இருக்கும் இடத்திற்கே தங்கள் வாழ்க்கை முழுவதையுமே செலவழிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை இன்று பார்க்கலாம்

மத்தேயு அதிகாரத்திலே ஆண்டவர் சொல்லும்போதும். . . . என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். என்றுதான் சொல்கிறார். இருக்கும் இடத்தைப்பற்றி அங்கேயும் சொல்லவில்லை. இது சிந்திக்க இன்னுமொரு நல்ல கருத்து. . . .

**பல நேரங்களிலே நாம் உணவின் ருசிக்காகவும், உடையின் அலங்காரத்திற்காகவும் எந்த அளவிற்கு போதும் என்று நாம் வாழ்கிறோம் என்று சிந்தித்தால். . .. .**

இந்த அடிப்படை தேவை பற்றி சரியாக அறிந்திருந்தும், அதை முயற்சி செய்தும். . . .எப்படியோ நம்முடைய மனதை பலாத்காரமாக நம்முடைய சொந்த ஆசைக்கும் எண்ணத்திற்கும் இழுத்துச் செல்கிறதை நீங்கள் வாழ்க்கையிலே பார்க்கலாம்.

Example - 3

தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது. (யாக் 4:6)

That is why Scripture says: "God opposes the proud but gives grace to the humble (NIV)

இகழ்வோரை அவர் இகழுகிறார்: தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார். (நீதி. 3:34)

He mocks proud mockers but gives grace to the humble.

**நமது வாழ்க்கையிலே பல நேரங்களிலே நம்மையும் அறியாமல் நமது பெருமைகள் நமது தாழ்மையின் எண்ணங்களை மேற்கொள்வதை நாம் உணரலாம்.**

*(. . . ஒருசிலர் எனக்கு பெருமையில்லை என்று சொல்கிற வார்த்தையிலேயே பெருமை இருக்கும்.. . .. ).*

**சமாதானம், நீடியபொறுமை, சாந்தம் என்று மூன்று தன்மைகளை ஆவியின் கனியில் கூறப்பட்டுள்ளது. அந்த மூன்றையும் சிந்தித்தால். . . தாழ்மை எவ்வளவு முக்கியம், பெருமை எவ்வளவு தவிர்க்க வேண்டியது என்பது மிகவும் சுலபமாக விளங்கும்..**

நமக்கு இந்த அடிப்படை கருத்து பற்றி சரியாக அறிந்திருந்தும், அதை முயற்சி செய்தும். . . .எப்படியோ நம்முடைய மனதை பலாத்காரமாக நம்முடைய சொந்த ஆசைக்கும் எண்ணத்திற்கும் இழுத்துச் செல்கிறதை நீங்கள் வாழ்க்கையிலே பார்க்கலாம்.

Example - 4

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார். **இயேசுகிறிஸ்து** (மத். 12:36-37)

But I say unto you, That every idle word that men shall speak, they shall give account thereof in the day of judgment. For by thy words thou shalt be justified, and by thy words thou shalt be condemned. (KJV)

for every careless word they have spoken. (NIV)

**இதை நாம் அறிந்தவர்களாக இருந்தும், பல நேரங்களிலே நமது வாய் நம்மையும் அறியாமல் வீணான வாா்த்தைகளை அள்ளிக் கொட்டுவதை, நாம் கொட்டியபிறகு நிதானமாக சிந்தித்தால் நாம் உணரலாம்.**

**நமக்கு இந்த அடிப்படை கருத்து பற்றி சரியாக அறிந்திருந்தும், அதை முயற்சி செய்தும். . . .எப்படியோ நம்முடைய மனதை பலாத்காரமாக நம்முடைய சொந்த ஆசைக்கும் எண்ணத்திற்கும் இழுத்துச் செல்கிறதை நீங்கள் வாழ்க்கையிலே பார்க்கலாம்.**

**இந்த 4 உதாரணங்களையும் நீங்கள் அமைதியாக அமர்ந்திருந்து சிந்தித்துப் பாருங்கள்.**
***வேதத்திலே எனக்கு மிகவும் வருத்தமும் ஆச்சரியமும் உண்டாக்குகிற பல சம்பவங்களிலே ஒன்று சாலொமோன் சூழ்நிலை. . .***

Example - 5

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது; அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார்; சாலொமோன் அவர்கள்மேல் ஆசைவைத்து, அவர்களோடு ஐக்கியமாயிருந்தான். (1 இராஜா. 11:2)

. . . .

ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும், அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, (1 இராஜா. 11:9)

They were from nations about which the LORD had told the Israelites, "You must not intermarry with them, because they will surely turn your hearts after their gods." Nevertheless, Solomon held fast to them in love.

The LORD became angry with Solomon because his heart had turned away from the LORD, the God of Israel, who had appeared to him twice.

**ஞானமுள்ள இருதயத்தை கேட்ட இந்த சாலொமோனுக்கு. . .**
**கர்த்தர் ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தைக் கொடுத்தார்.**

உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன்; இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை. (1 இராதா. 3:12)

behold, I have done according to your words; see, I have given you a wise and understanding heart, so that there has not been anyone like you before you, nor shall any like you arise after you. (NKJV)

**என்று ஆசீர்வதிக்கப்பட்ட சாலொமோன், கர்த்தர் மிகவும் தெளிவாக எச்சரித்தும்,**
**. . . .எப்படியோ அவருடைய மனதை பலாத்காரமாக அவருடைய சொந்த ஆசைக்கும் எண்ணத்திற்கும் இழுத்துச் சென்றதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம்.**

**இதிலிருந்து நமது மனதானது. . .நமது அறிவையும் முயற்சிகளையும் மீறி நம்மை ஆட்கொள்ள வல்லமையுள்ளது என்பதை நாம் உணரலாம்..**

எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்? (எரே 17:9) (***என்று சொல்லி நாம சும்மா அப்படியே இருக்கமுடியாது. .*** )

The heart is deceitful above all things and beyond cure. Who can understand it? (NIV)

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். (மத் 5:8)

Blessed are the pure in heart, for they will see God.

**நமது மாம்சத்தின் ஆசைகள், ஆசைகளின் இச்சைகள் நம்மை எப்பொழுதுமே ஆட்கொள்ள முயற்சிக்கிறது.**

நான் கிறிஸ்துவுக்குள் வந்தபிறகு எவ்வளவோ மாறிவிட்டேன். எனது கோபங்கள், எரிச்சல்கள் போன்ற குணங்கள் எவ்வளாவோ குறைந்துவிட்டன.. . . . சிலர் சொல்வதை நீங்கள் கவனித்திருக்கலாம்..
கிறிஸ்துவுக்குள் நாம் வாழவும் கிறிஸ்துவை பின்பற்றவும். . .. அது போதாது. ..
பழையவைகள் ஒழிந்தன, எல்லாம் புதிதாயின. . . என்று வேதம் சொல்கிறது.
கிறிஸ்துவுக்குள் எல்லாம் புதிதாகவேண்டும். கொஞ்சம் அல்ல. . எல்லாம். . . சிந்தியுங்கள். .

கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். (கலா 5:24)
Those who belong to Christ Jesus have crucified the sinful nature with its passions and desires.
**இப்படிப்பட்ட கிறிஸ்துவினுடையவர்களாக நாம் இருப்போமானால். . . ..**
மரணம், ஜீவன், தேவதூதர்கள், அதிகாரங்கள், வல்லமைகள், நிகழ்காரியங்கள், வருங்காரியங்கள், உயர்வு, தாழ்வு, வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோமர் 8:38-39)
For I am convinced that neither death nor life, neither angels nor demons, neither the present nor the future, nor any powers, neither height nor depth, nor anything else in all creation, will be able to separate us from the love of God that is in Christ Jesus our Lord. (NIV)
**இப்படி நிச்சயித்து உறுதியுடன் சொன்ன அப்போஸ்தலர் பவுலைப் பற்றியும் இந்த வேதத்தில் உள்ளது. சாலொமோனின் பெலவீனங்களைப் பற்றியும் இந்த வேதத்தில் உள்ளது.**
**இதிலே எதைத் தெரிந்தெடுப்பது என்பது நமது கையில். கர்த்தர் நமக்கு உதவிசெய்வார். ஆமென்.**

என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். **இயேசுகிறிஸ்து**. (மத். 26:39)
My Father, if it is possible, may this cup be taken from me. Yet not as I will, but as you will."
**அப்படிப்பட்ட இயேசுகிறிஸ்துவை நோக்கி நாம் ஜெபிக்க இருக்கிறோம்.**

அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார். (ஏசா. 53:12) **என்ற வசனப்படி. . .**
Therefore I will give him a portion among the great, and he will divide the spoils with the strong, because he poured out his life unto death, and was numbered with the transgressors. For he bore the sin of many, and made intercession for the transgressors.
**அவருக்கு பங்காக அவரோடு இணைந்து வாழ, நமக்கு தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாக கொடுத்த கிருபையை நினைத்து நாம் ஜெபிக்கப் போகிறோம்.**

**நாம் இவ்வளவு நேரம் சிந்தித்ததை ஒரேவசனத்திலே எவ்வளவு அருமையாக ஆண்டவர் சொல்லியிருக்கிறார். வாசியுங்கள்.**

லூக்கா/Luke 9:23 **(பக்கம் 94)**
பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.
Then he said to them all: "If anyone would come after me, he must deny himself and take up his cross daily and follow me. (NIV)

you must turn from your selfish ways, (NLT)
let him deny himself [[a]disown himself, [b]forget, lose sight of himself and his own interests, [c]refuse and give up himself] (AMP)

*From web reference:* to deny
a) to affirm that one has no acquaintance or connection with someone
b) to forget one's self, lose sight of one's self and one's own interests

நாம் இயேசுகிறிஸ்துவை வெறுமனே வணங்கிச் செல்பவர்களாக இன்லை. அவரைப் பின்பற்றி வாழ பிரியப்படுகிறதினாலேதான் நாம் ஒவ்வொரு ஆராதனைக்கும் வரவும் அவருடைய வேதத்தை மேலும் மேலும் அறியவும் முயற்சி செய்கிறோம்.

அப்படி அவரைப் பின்பற்ற நம்மை நாமே வெறுத்து,

அதாவது நமது மாம்சத்தின் ஆசைகள், நான் என்கிற உணர்வுகளை

நாம் கட்டுப்படுத்துகிறோமா? அல்லது நமது உணர்வுகள் நம்மைக் கட்டுப்படுத்துகிறதா?

இதை ஆராய்ந்து பார்ப்போம்.

உமது வசனத்தின்படியே என்னை உணர்வுள்ளவனாக்கும். (சங் 119:169)

*Web Reference*: Buddha declared: "One may conquer a million men in a single battle; however, the greatest and best warrior conquers himself."

நம்மை நாமே ஆட்கொள்கிறவர்களாக எந்நேரத்திலும் இருக்க கர்த்தரை வேண்டுவோம்.

அவர் நமக்கு மாதிரியை இந்த உலகத்திலே வந்து காண்பித்து சென்றிருக்கிறார். அதை நாம் பின்பற்ற முயற்சிப்போம். அதற்கான பெலத்தை நமக்கு கொடுக்க அவரையே வேண்டி நிற்போம். அவர் நமக்கு காண்பித்த மாதிரியை வாசிப்போம்.

பிலிப்பியர்/Philippians 2:6-8

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,

7. தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.

8. அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

Who, being in very nature God, did not consider equality with God something to be grasped, but made himself nothing, taking the very nature of a servant, being made in human likeness. And being found in appearance as a man, he humbled himself and became obedient to death—even death on a cross! (NIV)

…he gave up his divine privileges (NLT), …But made himself of no reputation (KJV)

…But stripped Himself [of all privileges and rightful dignity], (AMP)

*From Web reference:*

1) to empty, make empty, a) of Christ, he laid aside equality with or the form of God
2) to make void, a) deprive of force, render vain, useless, of no effect
3) to make void, b) cause a thing to be seen to be empty, hollow, false

தம்மைத்தாமே வெறுமையாக்கினார் இயேசுகிறிஸ்து. அந்த பரிசுத்த தேவனை நாம் பின்பற்ற, நமக்கு அவர் சொல்வது தன்னைத் தான் வெறுத்து. . .

வெறுப்பதற்கும். . .வெறுமையாக்குவதற்கும் பெரிய வித்தியாசம் உள்ளது. சிந்தியுங்கள்.

இப்படியே இந்த ஜீவனுள்ள வசனத்தை சிந்தித்துக்கொண்டே போகலாம்.. . . . .. முடிவேயில்லை.

அவருடைய வசனத்தின்படியே நம்மை உணர்வுள்ளவனாக்க வேண்டுவோம்.. . ..

நாம் ஒவ்வொரு காரியத்தையும் நேர்த்தியாக நேரத்தோடு செய்யும் பொழுது நமது சொந்த எண்ணங்கள், சோர்வுகள், அலட்சியங்கள் அந்த நேர்த்தியை குழப்பாமலும். . . .

போதுமென்ற மனதுடனே தனக்கானவைகளை மட்டுமல்ல மற்றவர்களுக்காகவும் நாம் செயல்படவும், பெருமையை அகற்றி, தாழ்மை கொள்ளவும்,

நம்முடைய வாயின் வார்த்தைகளை காத்துக்கொள்ளவும்,

நம் இருதயத்தின் எல்லா சிந்தைக்கும் இடம் கொடுக்காமல், ஆவியானவர் வழிநடத்துதலுக்கு முற்றிலுமாக நம் இருதய சிந்தனையை ஒப்புக்கொடுக்கவும்

. . . இயேசுகிறிஸ்துவின் சிந்தையே நம்மில் இருக்கவும்,

நமக்காக தம்மைத்தாமே வெறுமையாக்கின, சர்வ வல்லவர், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை உடையவரான இயேசுகிறிஸ்துவை நோக்கி,

நம்முடைய, நான் என்று நமக்குள்ளே இருக்கிற சொந்த பெலவீனங்கள் நம்மை ஆட்கொள்ளாமல் இருக்க இயேசுகிறிஸ்துவை நோக்கி நாம் மன்றாடுவோம்.

## Let us Pray